රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | **இணைந்த சேவைகள் பிரிவு** | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site


මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/10
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி: / Date: 2023.05.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**2011.08.01 ஆம் திகதியில் MN4-2006(A) சம்பளத் திட்டத்தின் கீழ் சம்பளம் வழங்கப்பட்டுள்ள மாகாண அரச சேவை பதவியொன்றில் இருந்து பின்னர் 16/2010(I) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க மத்திய அரச சேவையின் பதவியொன்றுக்கு இடமாற்றம் பெற்றதன் அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்களின் தகவல்களைக் கோருதல்**

10/2012(III) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க MN 4-2006(A) சம்பளத் திட்டத்தின் கீழ் சம்பளம் பெறும் பட்டதாரிப் பதவியொன்றில் 2011.08.01 ஆம் திகதியில் மாகாண அரச சேவையில் இருந்து பின்னர் *16/2010(I)* ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க மத்திய அரசின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியொன்றுக்கு இடமாற்றம் பெற்று சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு விருப்பம் தெரிவித்து அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 14 ஆம் பந்தியின் பிரகாரம் 2011.08.01 ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்பட்டனர்.

02. 2011.08.01 திகதியின் பின்னர் மத்திய அரசின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியொன்றுக்கு இடமாற்றம் பெற்றுள்ள உத்தியோகத்தர்களை இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியொன்றுக்கு உள்வாங்குதலும், மத்திய அரசின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் பதவிக்கு இடமாற்றம் பெற்று கடமைகளைப் பொறுப்பேற்ற திகதியில் நடைமுறைக்கு வர வேண்டியிருந்த போதிலும், சில உத்தியோகத்தர்கள் 2011.08.01 ஆம் திகதி முதல் இணைந்த சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு உள்வாங்கப்பட்டிருந்ததனால், அந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உள்வாங்கல் கடிதங்களில் திருத்தம் செய்து அரச சேவை ஆணைக்குழுவின் 04/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 06 பந்தியின்

ஏற்பாடுகளின் பிரகாரம் மத்திய அரசின் பதவிக்கு இடமாற்றம் பெற்ற திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் PSC/EST/08-05/02/2022 ஆம் இலக்க 2023.03.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைப் பணிவுடன் அறியத் தருகின்றேன்.

03. அதனால் தற்போது உங்கள் அமைச்சில்/திணைக்களத்தில்/அலுவலகத்தில் 2011.08.01 ஆம் திகதியில் மாகாண அரச சேவையில் இருந்து பின்னர் மத்திய அரசின் பதவியொன்று இடமாற்றம் பெற்றுள்ள 2011.08.01 ஆம் திகதியில் இணைந்த சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கி வழங்கப்பட்டுள்ள கடிதங்களில் திருத்தம் செய்யும் நோக்கில் அந்த உத்தியோகத்தர்களின் தகவல்களை பின்வரும் படிவத்திற்கு ஏற்பத் தயாரித்து *2023.07.30* ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு அனுப்பி வைக்குமாறு அறியத் தருகின்றேன்.

| தொ.இல. | உத்தியோகத்தரின் பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | நியமனம் பெற்ற மாகாண சபை | மாகாண அரச சேவையின் பதவியொன்றிலிருந்து மத்திய அரசின் பதவியொன்றுக்கு இடமாற்றம் பெற்ற திகதி | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கி வழங்கப்பட்ட கடிதத்தின் இலக்கம் *(CS/DOS/A/…………….)* |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம்